புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

==========================================================

# எழுத்தாளர் ஔவை நிர்மலாவின் வாழ்வியல் நெறிமுறைகள்

==========================================================

**ஆய்வாளர்,**
**கி.வீரமணி,**
*பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர்*
*தமிழ்த்துறை,*
*திரு.வி.க அரசு கலைக்கல்லூரி,*
*திருவாரூர் - 610003*

**இணை நெறியாளர்**
**முனைவர். கு.சந்திரன்**
*உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை,*
*திரு.வி.க அரசு கலைக்கல்லூரி,*
*திருவாரூர்.*

==========================================================

**ஆய்வுச்சுருக்கம்:**

*மனிதனாக பிறந்தவன் அனைவரும் உயர்வாக போற்றப்படுவதில்லை. அவர்களின் அற ஒழுக்கம் உடையவர்களே மனிதர்களாக சமூகத்தில் மதிக்கப்படுகிறார். அப்படிப்பட்ட அற நெறிமுறைகளைக் கடைபிடித்து சமுதாயத்தில் ஒரு அற ஒழுக்கத்தோடு வாழ்வதற்கான சில நெறிமுறைகளை எழுத்தாளர் ஔவை நிர்மலாவின் இலக்கிய நூல்களில் இருந்து தெரிந்து கொண்டு நாமும் பயன்பெறுவோம்.*

**திறவுச்சொற்கள்:**

*கல்வி, இயற்கை, மாசுபெருக்கு, மனிதநேயம், உலகம்*

**முன்னுரை:**

*ஆணும், பெண்ணும் அன்புடன் இணைந்து வாழ்வதால் தான் உலகம் நிலைத்து நிற்கின்றது. அவர்களின் உண்மையான உறவில்தான் தனித்தனி குடும்பங்கள் தோன்றின. மனிதன் அறநெறியில் நிற்பதற்கும் இன்பத்துடன் வாழ்வதற்கும் வாழ்வியல் அறங்கள் இன்றியமையாதது ஆகும்.*

*“அரிதரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது” என்பார் அறிவில் சிறந்த ஔவையார் அவர்கள் இப்படி மானிடப் பிறவியைப் பெற்ற மக்கள் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்குச் சில நெறிமுறைகளைப் பின்பற்றி வாழ வேண்டும். எப்படியும் வாழலாம் என்பதை மறந்து இப்படித்தான் வாழ வேண்டும் என்று மனத்தில் உறுதி மேற்கொண்டு செயலில் அதனை நடத்திக் காட்டுதல் வேண்டும். அறம் என்பது என்ன? செயலுக்கு அடிப்படையாக இருப்பது எண்ணம். எண்ணம் தூய்மையாக அமைய முடியும். எண்ணம் எழுவதற்கு இருப்பிடமாக உள்ள மனம் மாசு இல்லாததாக இருக்க வேண்டும் என்பதை தான் தமிழ் இலக்கியங்கள் யாவும் அறநெறி முறையைத் தான் மனித மனத்திற்கு எடுத்துக்காட்டுகின்றன. தம் கவிதை நூல் வாயிலாக அறத்தை நிலைநாட்ட சில நல்ல கருத்துக்களை நம்மிடையே பகிர்ந்து உள்ளார். அதை நாமும் பின்பற்றி உலகில் மனித நேயத்தோடு வாழ வழிவகை செய்வோம்.*

***கல்வி:***

*மனித வாழ்வினை மேம்படுத்தி நல்ல ஒழுக்கத்தையும் மன வலிமையையும் விரிந்த அறிவையும் சுய வலிமையையும் தருவது கல்வி. இம்மைக்கும் மறுமைக்கும் வழிகாட்டி ஒருவனை உயர்ந்தவனாக்குவது கல்வியே,*

***“குஞ்சி யழகும் கொடுத்தானைக் கோட்டழகும்***
***மஞ்கள் அழகும் அழகல்ல – நெஞ்சத்து***
***நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்***
***கல்வி அழகே அழகு”*** ***(நாலடியார் 131)***

*மனிதனுக்கு அழகு அழகல்ல. கல்வியே சிறந்த அழகு என்ற அற்புதக் கருத்தை விளக்குகிறது நாலடியார் பாடல் வரிகள். ஒழுக்கமும் நல்ல அறநெறியும் சிறப்புத் தரும் உயர்கல்வியே அழகானது என்ற உண்மையை எடுத்துக்கூறுகிறது இப்பாடல் வரிகள். இதேபோல் எழுத்தாளர் ஔவை நிர்மலாவின் கவிதைப் படைப்புகளில்,*

***கல்வி***

***“புத்தலகு நோக்கியொரு***
***பயணம் - இங்குப்***
***புறப்பட்டு விட்டதொரு***
***ஞானரதம்***
***நீதி உயர்ந்தமதி***
***கல்வி அன்பென***
***இந்த ஞானரதத்தின்***

***குதிரைகள் நான்கு”***

***(ஔவை நிர்மலா – அதிகாரப்பூச்சுகள் ப.எண்:84,86)***

*நீதியைக் காத்திடவும் கல்வி, உயர்ந்தமதி பெற்றிடவும் கல்வி வேண்டும். அன்புதான் அவனியிலே பெரிது என்றாலும் அறங்கள் பல செய்திடவே கல்வி வேண்டும். வீட்டிற்கொரு மரம் வளர்த்தல் நாட்டில் எங்கும் மழை பெருகும். கல்வி என்னும் கற்பகத்தால் வாழ்வினிலே ஒளி பெருகும். வானியலை வகுத்திடவும் மண் தரத்தைத் திருத்திடவும் ஊனமில்லாத உபகரணங்களை உருவாக்கித் தந்திடவும் கல்வி என்ற ஒன்றால் மட்டுமே முடியும். புத்தக மூட்டைகளில் புதைந்து போகாமல் வித்தகம் பெறுகின்ற வித்தைகளைக் கற்றிடுவோம். மனப்பாடம் செய்து வைத்து மதிப்பெண் வாங்குகின்ற சீரழிவை தொலைத்திடுவோம் என தன் கவிதை வரிகளில் கல்வி என்பது மனிதனின் வாழ்க்கையை நெறிப்படுத்தும் ஒரு கருவி என்பதை விளக்கியுள்ளார். அது மட்டுமின்றி நுண்ணறிவுப் பயிற்சியோடும் மனத்தூய்மையையும் ஆன்மீக நெறியையும் கற்பிப்பது தான் கல்வி என மொழந்தார் டாக்டர்.இராதாகிரு~;ணன் அவர்கள். சமுதாயத்தில் நல்லவர்ளை உருவாக்க கல்வி ஒன்றே துணை நிற்கும் என்பதன் நோக்கில் மாணவர்கள் பள்ளிகளில் மட்டும் கல்வியைப் பெற்று நின்று விடாமல தேனீக்களைப் போல பறந்து நூலகம் சென்று தன் அறிவைப் பெருக்கிக் கொள்ளவும் வழிவகுத்துள்ளார்.*

***“துடிப்புடை இளைஞ, யான் சொல்லலும் செய்தி***
***படிப்பினை நல்கும் பண்புறக் கேள்நீ”***
***பள்ளியில் படித்திடும் பாடபுத் தகங்கள்***
***தள்ளிட வொண்ணா அறிவை நல்கும்***
***மதிப்பெண் பெறுதலே லட்சியம் என்னும்***
***கதியினை அனைவரும் விதியாய்ச் சமைக்க***
***விதியே என்று மாணவர் படிப்பர்***
***விழுமிய அறிவைப் பெறலை நாடார்***
***பட்டம் பெற்றதும் பணத்தைக் கொடுத்தோ***
***துட்டர் தம்மின் பரிந்துரை பிடித்தோ***
***இட்டமில்லாப் பணிதனில் அமர்ந்தும்***
***விட்டார் படிப்பதை விழலாய்க் காய்ந்தார்.***
***உண்மைப் படிப்பு அதன்பின் தானே***
***கண்போல் நூல்கள் அறிவைத் துலக்கும்***
***மண்ணக வாழ்வில் மகத்தவம் நிறைக்கும்***
***தத்துவம் மருத்துவம் சரித்திரம் என்று***
***வித்தகர் படைத்த நூல்பல் லாயிரம்***
***எத்துறை விருப்போ அத்துறை நூலைச்***
***சித்தம் கலந்து சிறப்பாய்க் கற்பின்***
***புத்தர் ஞான போதியும் தோற்கும்”***

***-(ஔவை நிர்மலா – நூலக ஆற்றுப்படை ப.எண்:23,24)***

*என அறிவைப் பெருக்கிக் கொள்ள விழிப்புணர்வை உண்டாக்கியுள்ளார். இலட்சம் காசு செலவழிக்காமல் இலட்சியம் அடைய நூல்கள் உதவும். ஆதலால், நீயும் நூல்கள் படித்தால் சாதனைச் சிகரம் சேர்ந்திட லாகும் எனவும் வழியுறுத்தியுள்ளார். ஆகவே,*

***“இம்மை பயக்குமால் ஈயக்குறைவின்றால்***
***தம்மை விளக்குமால் தாமுயளராக் கேடின்றால்***
***எம்மை உலகத்தும் யாம்காணோம் கல்வி போல்***
***மம்மர் அறுக்கும் மருந்து”*** ***(நாலடியார் 132)***

*கல்வி என்பது மருந்து. அது ஓர் அருமருந்து. அது துன்பம் போக்கும் மருந்து, கல்வி இவ்வுலக இன்பம் தரும். எனவே கல்வியும் கல்வியால் விளையும் அறிவும் தான் மனிதனை மனிதனாக்கும். எனவே தான் வள்ளுவர் கல்வியை விழி என்றார். கல்வி அறியாமையைப் போக்கி அறிவை வளர்க்கும் பிற செல்வங்களோ அறிவை மறைத்து அறியாமையை வளர்ப்பன. ஆகவே, கற்றல் சிறப்புடையது என கூறப்படுகிறது.*

*ஆம் கல்வி ஒரு மனிதனின் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து நெறிமுறைகளையும் கற்றுத்தந்து சமுதாயத்தில் அவனை சிறப்பாக வாழ வழிவகுக்கின்றது என்பதையே இக்கருத்துக்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன. எனவே கல்வி ஒரு மனிதனுக்கு தேவையான அனைத்து நற்பண்புகளையும், ஒழுக்கங்களையும் கற்றுணரக்கூடிய நிலையான அறிவைப் பெறுவதாக உள்ளது. எனவே,*

***“கல்வியின் பயன் அறிவு***
***அறிவின் பயன் ஒழுக்கம்***
***ஒழுக்கத்தின் பயன் அன்பு***
***அன்பின் பயன் துறவு***
***துறவின் பயன் வீடுபெறு, சொர்க்கம்”***

*இறைவா பயனள்ள கல்வியைத் தா எனும் நபிமொழியின் கூற்றும் இதைத்தான் எடுத்து இயம்புகின்றன.*

***இயற்கை:***

*நம் முன்னோர்கள் இயற்கையோடு ஒன்றிணைத்து வாழ்ந்தார்கள். ஆனால் இன்றைய நவீன காலத்தில் நாம் இயற்கையோடு ஒன்றிணையாமல் செயற்கையோடு பிண்ணி பிணைந்து வாழ்கின்றோம். இயற்கையை பாதுகாத்து அதை நம் அடுத்த தலைமுறையினரிடம் கையளிக்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும். அப்படிப்பட்ட இயற்கை சூழலை சீரழிவதை தம் கவிதை வரிகளில் எடுத்துக் கூறியுள்ளார் எழுத்தாளர் ஔவை நிர்மலா அவர்கள்.*

***தடம் மாறும் வரப்புகள்***

***“மரமெல்லாம் வெட்டி வெட்டி***
***மச்சுவீடாப் போச்சி***
***மழதண்ணி இல்லாம***
***பயிருகருக லாச்சி***

***ஏரிகுளம் மேடாகி***
***பிளாட்டாகிப் போச்சி***
***ஏறச்சகெணறு நீருவத்திக்***
***குப்பத்தொட்டி ஆச்சி”***

***(ஔவை நிர்மலா – தடம்மாறும் வரப்புகள் ப.எண்:3)***

*மரங்களை எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக அழித்து இயற்கையைக் கொன்று வரும் காலங்களில் காற்றைக் காசு கொடுத்து வாங்கும் நிலைக்கு தள்ளப்படுவதை எச்சரித்துள்ளார்.*

***மாசுபெருக்கு:***

*நிலம், நீர், காற்று முதலிய இயற்கை மூலாதாரங்களை மாசுபாடு அடைவதால் சுற்றுச்சூழல் சீர்கெட்டு வருகிறது. காடுகளில் மரங்கள் வெட்டப்படுவதாலும் ஆறுகளில் மண் எடுக்கப்படுவதாலும், வாகனங்களில் இருந்து வரும் புகையும் காற்றில் கலப்பதால் இயற்கைச் சூழல் நாசமடைகிறது. சுற்றுச்சூழல் கெடுவதால் மனித குலம் மட்டுமல்ல விலங்கினங்களும் தாவரங்களும் அழிவுக்கு உள்ளாகி விடுகின்றன.*

***“நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்***
***வான்இன்று அமையாது ஒழுக்கு”*** ***(குறள்:20)***

*நீர் இல்லாமல் உலக வாழ்வு அமையாது அதைப்போல் நீரைத்தரும் வான்மழை இல்லாது போனால் எல்லோரிடமும் ஒழுக்கம் அமையாது என வழியுறுத்திருப்பது திருக்குறள் அதேபோல்,*

***விண்ணில் எழுந்து***
***வண்ணம் சிதறி***
***கண்ணைக் கவர்ந்தன***
***மத்தாப் பூக்கள்***
***பட்டென வெடித்துக்***
***காதை கிழத்தன***
***ஆயிரம்வாலா பட்டாசுகள்***
***அதிர்ந்து ஓய்ந்த***
***அத்தனை வெடிகளும்***
***சுற்றுச்சூழல் மாநாட்டைச்***
***சுகமாய்த் தொடங்கி வைத்தன.***

***(ஔவை நிர்மலா – அதிகாரப்பூச்சிகள் ப.எண்:46)***

*வள்ளுவன் சொன்னது போல் காற்றை மாசுபடுத்தும் மனிதனின் ஒழுக்கமின்மையை பதிவு செய்துள்ளார் எழுத்தாளர் அவர்கள்.*

**மனிதநேயம்:**

*அன்பு, கருணை, இரக்கம் மற்றும் சமூக நுண்ணறிவு இவை மனித குணங்களாக இருக்கின்றன. சக மனிதனிடம் அன்பு காட்டுவதை மனித நேயம் எனக்கூறலாம். இதில் உயிரிரக்கப் பண்பு என்பது மனித நேயத்தின் முக்கிய இடம் வகுக்கிறது. பிறருக்கு துன்பம் தராமல் இருப்பது. இயலாதவர்களின் துன்பத்தைப் போக்குவது. இளகிய இதயமும் இரக்க சுபாவமும் கொண்டிருப்பது எனக்கூறலாம்.*

**விழுதைத் தேடும் வேர்கள்**

***"ஒரே தலையணையில்
தலைபோடு தலைமுட்டி
போர்வைக்குள் உருண்டு
ஒரே பாயில் படுத்து
உடன்பிறப்புகளின்
அன்புப் பசை
கால ஓட்டத்தில்
காய்ந்து போய்
தனித்தனிக் குடும்பங்களில்
சிக்கிச் சிதிலமாகி
அன்பு நிறைந்த கண்கள்"***

***"முதியோர் இல்லத்தில்
சரண் புகுந்து
மூப்புக்குள் முடங்கி
மூச்சுகளை எண்ணி
தனிமை சுடும் போது
சொல்லாமல் கொள்ளாமல்
எமன் எதிர்வந்து நிற்க
கொள்ளி வைக்க
மகன் வருவானா என்று
விடைதெரியாமல் விக்கித்து நிற்கையில்
பட்டங்கள், விருதுகள், சுவை, சுகம்,
உறவுகள், நட்புகள் இழந்த இளமை
அத்தனையும் புள்ளிகளாய்"....***

***-(ஔவை நிர்மலா – வினாவைத் தொலைத்த விடை – ப.எண்:39,41)***

*கரைந்து போகும் மனித நேயத்தை நம் கண்முன் நிறுத்தி முதியோர் இல்லங்கள் குறைய வேண்டும். மனிதநேயம் தழைக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.*

***இதுதான் உலகம்:***

*பிறர்நலம் வேண்டிடும் இதயங்கள் இறைவன் வாழ்கின்ற இல்லங்கள். இறைவன் வாழும் இல்லங்கள் யாரும் இங்கு தனியன்று யாவற்றிலும் இறை நிலையுண்டு அதற்கு அன்பு என்று அதற்கோர் பெயருண்டு.*

***எம்மதமும்***

***"எல்லாச் சமயமும்***
***ஒன்றே என்னும்***
***எண்ணம் வளர்ப்போம்***
***நேயம் காப்போம்***
***மனத்தால் மதங்கள்***
***இணைவதனாலே***
***மலரும் புதுயுகம்***
***மானுடம் தழைக்கும்"***
***( ஔவைநிர்மலா – அதிகாரப்பூச்சிகள் ப.எண்:30)***

***எங்கெங்குக் காணினும் சாதியடா***

***"சாதிகள் இல்லையடி பாப்பாவெனும்***
***பாரதிவரியைப் பலமணி நேரம்***
***பகுத்து விரித்தார் சொற்பொழிவாளர்***
***சாதியில்லா நாடு தானே***
***தனது வாழ்வின் மூச்சென்றார்***
***பரவசமான பார்வையாளர்***
***ஒழிந்திடும் சாதி விரைவிலென்றார்"***
***( ஔவைநிர்மலா – அதிகாரப்பூச்சிகள் ப.எண்:58)***

*மனிதன் இடத்தில் சாதி, மதம், இனம் என்ற பாகுபாட்டை நீக்கி ஒற்றுமையுடன் மனித நேயத்தை வளர்க்கும் பண்பை எடுத்துக்காட்டியுள்ளார்.*

***பண்பெனப்படுவது:***

*நல்ல பண்புக்கூறுகள் என்பது நடத்தை முறை, நாகரீகம் மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றோடு தொடர்புடையது ஆகும்.*

***மனிதன் மனிதனாய்***
***மகத்துவம் பெற்றிட***
***அன்றோர் சான்றோர்***
***அத்தனைப் பேரும்***
***கொளத்தகும் பண்புகளைக்***

***கொள்கையாய் விரித்தார்***
***அத்தனையையும்***
***அலசி ஆய்ந்தால்***
***உண்மை, நேர்மை***
***இன்சொல் அடக்கம்***
***செய்ந்நன்றி என்னும்***
***ஐந்தைத் தேர்ந்து***
***நட்சத்திரப் பண்பாய்***
***முத்திரை குத்தலாம்"***

***(ஔவைநிர்மலா – வினாவைத்தொலைத்த விடை ப.எண்:111)***

*நல்ல பண்பு உடையவரது பெருத்த வாழ்க்கை இறப்பினும் நன்மையை உண்டாக்கும் இறந்த பிறகும் புகழ்தரும் ஒழுக்கநெறி கெடாத புண்ணியத்தால் மறுமையிலும் நன்மையைத் தரும். ஆதலால், நற்பண்புகளொடு வாழ வழிகோலுகிறது இப்பாடல் வரிகள்.*

***முடிவுரை:***

*மனிதன் நல்லவனாக வாழ வேண்டும். அவனிடத்தில் கீழ்மையும் கயமையும் சேர்தல் கூடாது. ஒழுக்கம் காத்து கீழ்மை விலக்கி கயமை மாற்றி நல்லோராய் நம்மை மாற்றும் நற்பண்புகளை நாம் வளர்த்துக் கொண்டு வாழ இக்கருத்துக்கள் நமக்கு துணை நிற்கும் என்பதில் ஐயமில்லை. மனிதன் தனித்து வாழ முடியாது. அவன் ஒரு சமூகப் பிராணி அவன் சேர்ந்து வாழும் இயல்பினன். தாய், தந்தை உறவால் வந்தவன். இந்த உறவை மனிதன் போற்ற வேண்டும். மதிக்க வேண்டும். உறவை விடாது நற்குணங்களோடும், ஒற்றுமையோடும் சேர்ந்து வாழ வேண்டும். நம் சமுதாயம் தழைக்க தன்னம்பிக்கையோடு,*

***தடைகள் எனக்கோ***
***கரையும் கற்கண்டு!***
***முயல்வேன் வெல்வேன்***
***வெற்றி என்கையில்***

*என நம்பிக்கையோடு வெற்றி பெறுவோம்.*

***பார்வை நூல்கள்:***


- *அதிகாரப்பூச்சிகள் - ஔவை நிர்மலா – விழிச்சுடர்பதிப்பகம்*
- *தடம்மாறும் வரப்புகள் - ஔவை நிர்மலா – விழிச்சுடர்பதிப்பக்*
- *திருக்குறள் - இணையம்*
- *நாலடியார் - கமலா கந்தசாமி*
- *நூலக ஆற்றுப்படை – ஔவை நிர்மலா – விழிச்சுடர்பதிப்பகம்*
- *வினாவைத் தொலைத்த விடை – ஔவை நிர்மலா – விழிச்சுடர்பதிப்பகம்*